**தலைப்பு 248 - இலங்கை மதுவரி திணைக்களம்**

**..........................................................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

**............................**

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

**.......................................................**

இலங்கை மதுவரி திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மதுவரி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை மதுவரி திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**........................................................................**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

.............................................................................................................

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

……………………………………………………………......................…………………..

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

…………………………………………………………..……

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

............................................................

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுடன் இணங்கியிருக்காமை

........................................................................................................................

அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தேவைப்பாடுகளை மீறிய சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................... | ............................................ | ..................... |
| (அ) | நிதி செயலாற்றல் கூற்றில் மீளாய்வாண்டிற்கான பாதீடு செய்யப்பட்ட தகவல்களைச் சமர்ப்பிக்கும் போது மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 35,000,000 தொகையான புகையிலை வரி வருமானம் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது இவ்வாறான நிலைமை ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுப்பதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரித்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் 248-1-1-0-1003-5/11 ஆம் இலக்க ஊக்குவிப்பு படி செலவு விடயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட பணம் ரூபா 23,000,000 ஆக இருந்த போதிலும் ரூபா 19,800,000 தொகையான குறைநிரப்பு மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டினை அதற்கு செம்மையாக்கியதன் காரணமாக ஏ.சீ.ஏ 2 படிவம், ஏ.சீ.ஏ 2(i)படிவம், ஏ.சீ.ஏ 2(ii) படிவம் மற்றும் ஏ.சீ.ஏ 2(iii) படிவங்களின் மதிப்பீடு செய்த நிதி ஏற்பாடு அத்தொகையால் அதிகரித்தும் குறைநிரப்பு, மதிப்பீட்டு நிதி ஏற்பாடு அத்தொகையால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமைக்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களை சரியாகத் தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) | நிதி செயலாற்றல் கூற்றில் சம்பளங்கள் மற்றும் ஏனைய ஊழியர் பிரதிபலன்கள் தொடர்பாக 2021 பாதீட்டு தகவல்களில் ரூபா 2,000,000 மொத்த தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதில்காலத்தில் சரியான மதிப்பீட்டினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |
| (ஈ) | நிதி செயலாற்றல் கூற்றில் நிவாரணம், மானியம் மற்றும் மாற்றங்களின் பாதீடு செய்யப்பட்ட திருத்திய பெறுமதிக்குப் பதிலாக தொடக்க பெறுமதியைக் காட்டியதன் காரணமாக ரூபா 2,000,000 தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக பதவுசெய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | -மேற்படி- |

**1.6.2 வருமானம் பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மதுபானங்கள் தொடர்பாக மீளச் செலுத்தப்பட்ட ரூபா 3,689,638,848 மொத்த தொகையான வரி தள்ளுபடியானது நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மதுபான ஏற்றுமதி மீதான மதுவரியை தள்ளுபடி செய்தல் சம்பந்தமான தகவல்கள் 2022 ஆம் ஆண்டிலிருந்து கணக்குப் பிரிவின் மூலம் ஆவணப்படுத்தப்பட்டு பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வரி தள்ளுபடி செய்தல் சம்பந்தமான கணக்கு நடைமுறை தொடர்பாக அமைச்சிடமிருந்து ஆலோசனை வேண்டப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கை மற்றும் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினதும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினதும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

.........................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ............................................. | ..................... |
| முன்னைய ஆண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீதி ரூபா 1,458,969,403 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான ஏ.சீ.ஏ 06 படிவத்தின் ஆரம்ப மீதி ரூபா 1,458,163,819 ஆகக் காட்டப்பட்டிருந்தமையின் காரணமாக ரூபா 805,584 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் வருடாந்த கணக்கினை தயாரிக்கும் போது சரியான ஆரம்ப மீதியினை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான ஆரம்ப மீதியினை உள்ளடக்கி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**1.6.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

.........................................................................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................... | ............................................. | ..................... |
| (அ) | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்கவேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்களை உள்ளடக்கிய பிணைப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் மற்றும் பிணைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிணை வைக்கவேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அந்த உத்தியோகத்தர்களின் பிணைவைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த நடவடிக்கை முடிந்ததன் பின்னர் அப்பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் பிணை பதிவேடு நாளது வரையாக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது நட்டங்கள், சேதங்கள் தொடர்பான பதிவேட்டினை நாளது வரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டினை நாளது வரையாக பேணுதல் வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 445 இன் பிரகாரம் மதுபான உற்பத்தி வருமான வரிப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது நாளது வரையாக்குவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நாளதுவரையாகப் பேணுதல் வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 445 இன் பிரகாரம் மதுபான ஏற்றுமதி மீதான வரியை தள்ளுபடி செய்தல் சம்பந்தமான தகவல்களைப் பதிவுசெய்வதற்கு பதிவேடு பேணப்படவில்லை. | 2022 ஆம் ஆண்டிலிருந்து தேவைப்பாட்டின் பிரகாரம் இப்பதிவேடு பேணப்படும். | நிதிப்பிரமாணம் 445 இன் பிரகாரம் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

### 1.6.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படவேண்டிய சான்றுபடுத்தல்கள்

..........................................................................................................................

2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் சம்பந்தமாக சான்றுபடுத்த வேண்டியிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| | ...................................... | ........................................... | ..................... |
| (அ) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணப்பட்டு வருகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை ஆக்கபூர்வமாக மேற்கொள்வதற்கு தேவையான வித்தியாசங்கள் | மதுவரித் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டினை வலுவுள்ளதாக பேணுவதற்குத் தேவையான நடைமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டு தேவையான சந்தர்ப்பங்களில் நேரத்துக்கு நேரம் மீளாய்வினை மேற்கொண்டு ஆக்கபூர்வமாக செய்யப்படும் எனவும் சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு | ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வினை எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான கூற்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | முறைமை பேணப்படுகின்றது எனவும் 2021 மே 07 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டது. | |
| (ஆ) | உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினை முறைப்படியாக அமுல்ப்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான நடைமுறை உள்ளது என பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் அறிக்கையின் 5.1 ஆம் பந்தியில் குறிப்பிட்ட அவதானிப்புக்களுக்கு இணங்க அத்தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | -மேற்படி- |

**2. நிதி மீளாய்வு**

..............................

**2.1 வருமான முகாமைத்துவம்**

.................................................

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| | ...................................... | ............................................ | ..................... |
| (அ) | மீளாய்வாண்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்ட மதுவரி வருமானம் ரூபா 160 பில்லியனாகும். கொவிட் தடுப்பூசி ஏற்றல், சுற்றுலாத் தொழில் வீழ்ச்சியடைந்தமை, உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டமை ஆகிய விடயங்களின் காரணமாக ரூபா 27 பில்லியனால் வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது என திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும் திணைக்களத்தினால் வருமான இலக்கு ரூபா 160 | கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக மதுபான உற்பத்திச் சாலைகள் மூடப்பட்டிருந்தமையால் எதிர்பார்த்த வருமான இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியாமையின் அடிப்படையில் வருமான மதிப்பீட்டினை திருத்துமாறு நிதி அமைச்சிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. | வருமான மதிப்பீட்டின் பிரகாரம் வருமானத்தை அறவீடு செய்வதற்கு உச்ச அளவு முயற்சி எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பில்லியனிலிருந்து ரூபா 135 பில்லியன் வரை ரூபா 25 பில்லியனால் அல்லது 15.62 சதவீதத்தால் திருத்தம் செய்வதற்காக 2021 ஒக்தோபர் மாதம் 28 ஆந் திகதி வேண்டிக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க திருத்திய வருமான மதிப்பீடு ரூபா 140 பில்லியனாகி ரூபா 138 பில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக ஒவ்வொரு உற்பத்திச் சாலைக்கும் மாதாந்த அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த இலக்குகளை அடைந்து கொள்வது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 04 நிறுவனங்கள் மாத்திரம் 03 சதவீதத்திலிருந்து 28 சதவீதம் வரையான வீச்சில் இலக்கிடப்பட்ட வருமான எல்லையை மிகைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. 14 நிறுவனங்கள் 10 சதவீதத்திலிருந்து 68 சதவீதம் வரையான வீச்சில் இலக்கினை அடைந்து கொள்ளாதிருந்ததுடன் அதில் 09 நிறுவனங்கள் 30 இற்கு மேற்பட்ட சதவீதத்தில் இலக்கினை அடைந்து கொண்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | இலக்கினை அடைந்து கொள்வது சம்பந்தமாக மெய்நிகர் தொழில் நுட்பத்தினூடாக உத்தியோகத்தர்கள் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளையும் பணிப்புரைகளையும் வழங்கியுள்ளனர். அடிக்கடி எழுத்து மூலமும் அறிவுறுத்தல்களும் பணிப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளன. உற்பத்திச் சாலைகளில் காணப்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானத்தின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமான இலக்கினை அடைந்து கொள்வதில் சிக்கல் உருவாகியிருந்தது. | இலக்கினை அடைந்து கொள்வது சம்பந்தமான தரவுகளை பகுப்பாய்வு ரீதியாக மீளாய்வு செய்து உரிய இலக்கினை அடைந்து கொள்வதற்கு உற்பத்திச் சாலைகளை தொடர்புபடுத்துவது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் 44 போத்தல் கள்ளு உற்பத்திச் சாலைகள் செயற்பட்டு வந்ததுடன் 11 தென்னங்கள்ளு போத்தல் உற்பத்திச் சாலைகளிலிருந்து ரூபா 66,618,289 தொகையும் 22 பனங்கள்ளு போத்தல் உற்பத்திச் சாலைகளிலிருந்து ரூபா 20,536,816 தொகையுமாக ரூபா 87,155,105 மொத்த தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. மேலும் 5 தென்னங்கள்ளு உற்பத்திச் சாலைகளும் 6 பனங்கள்ளு | 2021 ஆம் ஆண்டில் 05 தென்னங் கள்ளு உற்பத்திச்சாலைகள் மற்றும் 03 பனங்கள்ளு உற்பத்திச் சலைகள் மாத்திரம் நாளதுவரையாக்கப்பட்டிருந்தன. நீண்டகாலமாக உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருந்த நிறுவனங்களை பரீட்சித்துப்பார்த்து பொருத்தமான நடவடிக்கைகளை பின்பற்றுவதற்கு ஆலோசனை | செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட உற்பத்திச்சாலைகள் தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து பார்த்து செயற்படும் நிலைக்கு கொண்டு வருவதன் மூலம் உற்பத்திவரி வருமானத்தை அறவீடு செய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்திச் சாலைகளும் மீளாய்வாண்டின் போது செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதன் காரணமாக அந்த உற்பத்திச்சாலைகளிலிருந்து கிடைக்கவேண்டிய போத்தல் கள்ளு உற்பத்தி வரி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறான நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் மதுபான உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து ரூபா 4,537,361,087 தொகையும் கள்ளு உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து ரூபா 857,186 தொகையும் வடிசாலைகளிலிருந்து ரூபா 12,455,210 தொகையுமாக மொத்த நிலுவை வரி மற்றும் தாமதக் கட்டணமாக ரூபா 4,550,673,483 மொத்த தொகை மதுவரித் திணைக்களத்தினால் அறவிட வேண்டி இருந்தது. அதனை 2020 ஆம் ஆண்டிற்கான நிலுவை வருமானத்துடன் ஒப்பிடுகையில் 14.63 சதவீத அதிகரிப்பு என்பது அவதானிக்கப்பட்டது. | தாமதத்திற்காக ஒரு மாதத்திற்கு 3% ஆன தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்படும். அதற்கிணங்க 2020 ஆம் ஆண்டின் நிலுவை வரிப் பணத்திற்கான தண்டப் பணத்தைப் போல 2021 ஆம் ஆண்டின் நிலுவை வரிப் பணமும் தண்டப் பணமும் உள்ளடக்கப்பட்டிருந்ததனால் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் அதிகரிப்பு சுட்டிக்காட்டப்பட்டது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவீடு செய்ய முடியாத 05 நிறுவனங்கள் தொடர்பான நிலுவை வரிப்பணம் ரூபா 360,625,439 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையான தாமதக் கட்டணம் ரூபா 1,724,514,749 தொகையையும் உள்ளடக்கி ரூபா 2,085,140,188 மொத்த தொகையான வருமானத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. இதில் 03 நிறுவனங்கள் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்வதற்குத் தேவையான அடிப்படை விடயங்களை வரைபாக்கும் சந்தர்ப்பத்தில் நிலுவை மதுவரி மற்றும் தாமத் கட்டண கொடுப்பனவு தொடர்பாக | நிலுவை வரியினை அறவீடு செய்வதற்காக இரண்டு கம்பனிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்குத் தேவையான அடிப்படை நடவடிக்கைகள் தற்பொழுது இத்திணைக்களத்தின் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்தும் உரிய நிறுவனங்கள் அந்த இணக்கப்பாட்டினை மீறி நிலுவை வரியையும் தாமதக் கட்டணத்தையும் செலுத்தத் தவறியிருந்தன. | | |
| (ஊ) | உற்பத்தி நடவடிக்கைகளை கைவிட்டுள்ள ஒரு கம்பனியிடமிருந்து மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் அறவிட வேண்டியிருந்த நிலுவை வரிப்பணம் ரூபா 1,248,194,257 ஆக இருந்ததுடன் அதற்கான தாமதக்கட்டணம் ரூபா 793,225,429 ஆகும். உரிய கம்பனி உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக ஆரம்பத்தில் ரூபா 100,000,000 தொகையை செலுத்துவதற்கும் மிகுதியை 24 தவணைகளில் செலுத்துவதற்கும் 2021 யூன் 23 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. இதன் தொடக்க கொடுப்பனவு 02 தவணைகளின் கீழும் இதன் முதலாவது தவணைப்பணம் 2021 யூன் 30 ஆந் திகத செலுத்துவதற்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் அமைச்சரவை தீர்மாத்தின் அடிப்படையில் மீண்டும் உற்பத்தி அனுமதிப்பத்திரத்தினை நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உரிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கிணங்க இந்த நிறுவனத்தினால் அறவிட வேண்டிய மிகுதி நிலுவை வரிப் பணம், தாமதக் கட்டணம், முன்நிலுவைக் கட்டணம் ஆகிய அனைத்தையும் அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையான தொடக்க நடவடிக்கைகள் மதுவரித் திணைக்களத்தின் சட்டபிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. | -மேற்படி- |
| (எ) | உற்பத்தி செய்யப்படுகின்ற ஒவ்வொரு பீடிக்கும் சுருட்டுக்கும் வரி விதித்தல், பயன்படுத்துகின்ற பீடி/சுறுட்டு, புகையிலை மூலப்பொருட்களின் அடிப்படையில் வரியினை விதிப்பதற்கு மற்றும் புகையிலையினைப் போல உற்பத்தி செய்த பீடி/சுறுட்டுக்களை எடுத்துச் செல்லும் அனுமதிப்பத்திரத்தினை அறிமுகப்படுத்துவதற்கான | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | தேவையான ஏற்பாடுகளை வழங்கும் வகையில் உரிய திருத்த நடவடிக்கைகளை விரைவுபடுத்துவது தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டளையை உள்ளடக்கி 1625/1 ஆம் இலக்க 2009 ஒக்தோபர் 26 ஆந் திகதிய ‘‘2009 இன் 1ஆம் இலக்க புகையிலை வரி (சாதாரண) கட்டளை’’ எனும் பெயரிலான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்து 2018 யூலை 05 ஆந் திகதி சட்ட வரைபுத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. புதிய திருத்தத்தை மேற்கொள்வதற்காக 1999 இன் 08 ஆம் இலக்க புகையிலை வரி அதிகாரச் சட்டம் திருத்தம் செய்யப்பட வேண்டும் எனவும் இது சம்பந்தமாக திருத்தம் செய்யும் நடவடிக்கை இடம் பெற்று வருவதாகவும் சட்ட வரைபுத் திணைக்களத்தினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. 2019 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய மதுவரி ஆணையாளர் நாயகத்தின் ED/2019 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் புகையிலை உற்பத்திக்கான வரி சம்பந்தமான பிரேரணை நிதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் இன்றுவரை அதன் செயல் முன்னேற்றம் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

## 2.2 செலவு முகாமைத்துவம்

.............................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................... | ............................................ | ..................... |
| (அ) | 05 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காக ரூபா 33,000,000 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அதில் ரூபா 28,919,335 மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவு விடயங்களின் சேமிப்பானது வழங்கப்பட்ட | 2021 ஆம் ஆண்டு முழுவதும் நாட்டில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக பிராந்திய அலுவலகங்களும் தலைமை அலுவலகமும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு அடிக்கடி மூடப்பட்டிருந்தமை, உத்தியோகத்தர்கள் சேவைக்கு | நி.பி 127(4) மற்றும் (5) ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாட்டில் 06 சதவீதத்திற்கும் 28 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | சமூகமளித்தல் குறைவடைந்தமை, கொள்வனவு செய்யும் நடவடிக்கையை திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியாமை, பராமரிப்பு நடவடிக்கை திட்டமிட்டவாறு இடம்பெறாமை என்பவற்றின் அடிப்படையில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | 04 மூலதன செலவு விடயங்களுக்காக ரூபா 45,200,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் அதில் ரூபா 37,631,029 மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அச்செலவு விடயங்களின் சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 7 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது. | கொவிட் தொற்று நோய் நிலைமையின் காரணமாக திட்டமிடப்பட்டவாறு கட்டிட பராமரிப்பு நடவடிக்கை மற்றும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்தலும் பராமரிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாததனால் அச்செலவுத் தலைப்பின் கீழுள்ள நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (இ) | 248-1-1-0-2104 (59) ஆம் இலக்க கட்டிட நிர்மாண செலவு விடயத்தின் கீழ் ரூபா 200,000,000 நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் செப்தெம்பர் மாதம் வரை அந்த நிதி ஏற்பாட்டினை முறையாக உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தியிருக்கவில்லை. நி.பி 66 இன் கீழ் ரூபா 14,200,000 தொகை ஏனைய செலவு விடயத்திற்கு 2021 ஒக்தோபர் மாதத்தின் போது மாற்றப்பட்டிருந்ததுடன் இரண்டு சந்தர்ப்பங்களின் போது ரூபா 152,000,000 கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடு மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்கிணங்க திட்டமிட்ட 08 பிராந்திய அலுவலகங்களின் நிர்மாணங்கள் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காணரமாக பயணக் கட்டுப்பாடு விதித்தல் மற்றும் அடிக்கடி நாடு மூடப்பட்டிருந்ததனால் திட்டமிட்டவாறு செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதிருந்தமை, அனைத்து நிர்மாண வேலைகளுக்கும் உருவாகிய மூலப்பொருள் தட்டுப்பாட்டின் காரணமாக கட்டிட நிர்மாண நடவடிக்கைகளை திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியாதிருந்தமை போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்தது. | -மேற்படி- |

**2.3 முற்பணங்களை வழங்குதலும் தீர்த்துவைத்தலும்**

.....................................................................................

அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் ‘‘பீ’’கணக்கு

.........................................................................................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................... | ............................................ | ..................... |
| (அ) | மரணமடைந்த 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 587,077 ஆக இருந்ததுடன் அதில் ஒரு உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 238,110 கடன் மீதி 2-3 இற்கும் இடைப்பட்ட ஆண்டுகள் காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | ஒரு உத்தியோகத்தரின் கடன் மீதி 208,360 தொகையானது 2022 மே மாதம் மரணப்பணிக் கொடையிலிருந்து அறவிடப்பட்டுள்ளது. மிகுதி நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட இராஜினாமாச் செய்த மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,296,611 மொத்த தொகையான மீதி காணப்பட்டதுடன் அதில் 05 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 488,127 மொத்த தொகையான கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டன. | நிலுவைக்கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |
| (இ) | ஓய்வுபெற்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து 3-12 மாதங்களுக்கிடைப்பட்ட காலமாக ரூபா 1,066,723 தொகையான கடன் மீதி | 07 உத்தியோகத்தர்களின் ரூபா 668,436 கடன் மீதி 2022 மே மாதமளவில் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி கடன் மீதியையும் அறவீடு | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவையாகக் காணப்பட்டது. | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (ஈ) | வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட 17 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய கடன் மீதி ரூபா 2,077,880 ஆகும். இதில் 02 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 140,202 மொத்த தொகையான கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

## 2.4 வைப்பு மீதிகள்

........................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................... | ........................................... | ..................... |
| (அ) | மீளாய்வாண்டில் 03 வைப்புக் கணக்குகளில் 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 854,211 மொத்தத் தொகையான 10 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நி.பி 571(3) இன் பிரகாரம் உரிய விபரங்கள் கிடைக்கும் வரை நிச்சயமற்றதாக வைக்கப்பட்டுள்ள பணத்தை காலாவதியான வைப்பாகக் கருதி பெறுவனவுகளுக்காக இடமளிக்காது சந்தர்ப்பத்திற்கு ஏற்றவகையில் உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கவேண்டியதுடன் இல்லையாயின் மிக விரைவாக மீளச் செலுத்த வேண்டிய போதிலும் 6000-0-0-18-0-119 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் | -மேற்படி- | -மேற்படி- |

அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாது ரூபா 80,000 தொகையான 10 வைப்புக்கள் காணப்பட்டன.

## 2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

.....................................................

வங்கிக் கணக்கு செயற்பாடுகள் சம்பந்தமாக மேற்கொண்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ........................................... | ..................... |
| (அ) மதுபான உற்பத்திச் சாலைகள், வடிசாலைகள் மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனங்களினால் வங்கியின் மூலம் வரி செலுத்துதல்களை மேற்கொள்ளும் போது வாடிக்கையாளரை இனங்காணும் நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்ற போதிலும் அதன் செயற்பாடுகள் முடிவடைந்திருக்கவில்லை. அதன் காரணமாக வங்கி கணக்கிணக்க கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவுகள் தொடர்ச்சியாக காணப்பட்டு வருகின்றமை அவதானிக்கப்பட்டது. | இலங்கை வங்கியுடன் தொடர்பு கொண்டு திணைக்களத்தின் வருமான சேகரிப்பிற்காக வங்கி வைப்பு பத்திரத்தை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வரிக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது வாடிக்கையாளர்களை இனங்காணும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும் |
| (ஆ) 7041628 ஆம் இலக்க வங்கி கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் 03 மாதங்களை மிகைத்த ரூபா 2,552,867 மொத்ததொகையான இனங்காணப்படாத 30 | தற்பொழுது 07 பெறுவனவுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பெறுவனவுகளை துரிதமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு | துரிதமாக பெறுவனவுகளை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவுகள் காணப்பட்டதுடன் அதில் ரூபா 1,346,985 தொகையான 17 பெறுவனவுகள் 2022 யூன் 30 ஆந் திகதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட வங்கி கணக்கிணக்கக் கூற்றிலும் காணப்பட்டது. | வருகின்றது. | |
| (இ) | 7041629 ஆம் இலக்க வங்கிக் கணக்கில் மீளாய்வாண்டின் இறுதியில் 03 மாதங்களை மிகைத்த ரூபா 158,066 தொகையான இனங்காணப்படாத 12 பெறுவனவுகளில் ரூபா 64,211 மொத்த தொகையான 09 பெறுவனவுகள் 2022 யூன் 30 ஆந் திகதி சமர்ப்பித்த வங்கி கணக்கிணக்க கூற்றில் காணப்பட்டது. | தற்பொழுது 03 பெறுவனவுகள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மிகுதிப் பெறுவனவுகளை துரிதமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | -மேற்படி- |

## 2.6 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

**…………………………………………………………………………………**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

**அவதானிப்புக்கள்**

**……………………**

| | **சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|---|
| | ………… | …………………. | …………………… | ………………… |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின்<br>நி.பி 104 (4) | நட்டங்கள், சேதங்கள் தொடர்பான முழுமையான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு 07 மாதங்களுக்கு மேல் தாமதம் ஏற்படுமாயின் நிதிப்பிரமாணம் 104(7) இன் பிரகாரம் தொடக்க அறிக்கையும், | CAR-0183 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் பொலிஸ் அறிக்கை இன்றுவரை கிடைத்திருக்கவில்லை. CAE-0599 ஆம் இலக்க மோட்டார் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிதிப்பிரமாணம் 104(04) இன் பிரகாரம் நட்டங்கள் சேதங்கள் இடம்பெற்ற திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் ரூபா 850,318 மொத்த தொகையான நட்டங்கள் சம்பந்தமாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத 02 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | வாகனத்தின் விபத்து சம்பந்தமாக மீண்டும் விசாரணைக் குழு நியமிக்கப்பட்டு விசாரணை நடவடிக்கைகள் விரைவாக முடிவுறுத்தப்படும். | |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங் நிதி சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக வடிசாலைகள், போத்தல் கள்ளு உற்பத்திச்சாலை, குடிக்கின்ற மற்றும் குடிக்காத ஸ்பிரீட் இறக்குமதி, வெளிநாட்டு மதுபான இறக்குமதி முதலிய வருமான மூலங்களுக்கான மாதாந்த இலக்கு, அந் இலக்கினை அடைந்து கொள்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள், அந்நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளை உள்ளடக்கி வருமானத்தை அறவீடு செய்யும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்துவரும் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தினைத் தயாரிக்கும் போது மாதாந்த இலக்கினையும் அடைந்து கொள்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையின் செயல்முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளும் உள்ளடக்கப்படும். | அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் வருமானங்களை அறவீடு செய்யும் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 28ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தி, நி.பி 31, நி.பி 880 மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்தின் 612 | அரசாங்க நிதி தொடர்பான பொறுப்பு வகித்தல் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான கணக்கீட்டு உத்தியோகத்தராக ஒவ்வொரு திணைக்கள தலைவரினாலும் பிணைவைக்கப்படுகின்றது என்பதனை கவனிக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் மதுவரி திணைக்களத்தினால் இரண்டு | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டதுடன் பிணை வைக்கும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றது. | பிணை கட்டளைச் சட்டம், நிதிப்பிரமாணம், சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| ஆம் அத்தியாயம் | உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரமே அவ்வாறு பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |

**2.7 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**..............................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **......................................** | **...........................................** | **.....................** |
| மதுவரித் திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் இல்லாது 08 நிறுவனங்களினால் குடிக்கமுடியாத ஸ்பிரிட்கள் இறக்குமதி செய்த 10 சந்தர்ப்பங்களும் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் ஸ்பிரீட்களை கப்பலில் ஏற்றிய 17 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. எனினும் இந்த அனைத்து இறக்குமதிகளுக்குமான தொழில்நுட்ப குற்ற அறிக்கைகளுக்குரிய தண்டப்பணம் நிர்ணயிக்கப்பட்டதன் பின்னர் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்கு மதுவரித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.<br><br>எவ்வாறாயினும் 2018 பெப்ரரி 21 ஆந் திகதிய 07/2018 ஆம் இலக்க குடிக்காத ஸ்பிரீட்களை இறக்குமதி செய்வதற்கான மதுவரி என்ற தலைப்பிலான மதுவரி அறிவித்தலின் 3(i) ஆம் பிரிவின் பிரகாரம் மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் மதுவரி கட்டளைச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளின் கீழ் எந்த ஒரு நபருக்கும் குறித்த செயற்பாட்டிற்காக வழங்கப்பட்ட அதிகாரப் பத்திரத்தின் அதிகாரத்திற்கு உட்படுவதனைத் தவிர்த்து அதன் 1 ஆவது பட்டோலையில் குறிப்பிட்ட | அதிகாரப் பத்திரத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி குடிக்க முடியாத ஸ்பிரீட்டினை இறக்குமதி செய்தல் சம்பந்தமான தொழில்னுட்ப குற்ற அறிக்கையை சமர்ப்பித்து அதற்காக அமைதிப்படுத்தல் பணத்தை அறவிட்டு அக்கொள்கலன்களை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய மதுவரி அறிவித்தலின் 3(i) ஆம் பிரிவின் பிரகாரம் நிபந்தனைகள் மீறப்படுமாயின் மதுவரி கட்டளைச் சட்டத்தின் 56 அல்லது 48 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

குடிக்கமுடியாத ஸ்பிரீட் வகையினை யாராவது ஒரு நபரினால் இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், உற்பத்தி செய்தல், ஒதுக்கி வைத்திருத்தல், களஞ்சியப்படுத்தல், விற்பனை செய்தல், எடுத்துச் செல்லல், விற்பனை செய்வதற்காக முன்வருதல் அல்லது காட்சிப்படுத்துதல் செய்யாதிருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. மேலும் அப்பிரிவு மற்றும் நிபந்தனை மீறப்படுமாயின் மதுவரி கட்டளைச் சட்டத்தின் 56 அல்லது 48 ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும் மதுவரி திணைக்களத்தினால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

....................................

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

...................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ..................................... | ................................... | ..................... |
| **(அ)** | **கனணி மென்பொருள் முறைமை** | | |
| | திணைக்களத்தின் கணனி மென்பொருள் முறைமையை செயற்படுத்துவதற்காக ரூபா 10 மில்லியன் பாதீட்டு நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தும் உரிய செயற்திட்டம் அமுல்ப்படுத்தாமையின் காரணமாக அதில் ரூபா 536,800 தொகையான நிதி ஏற்பாடு மீள ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 9,060,000 தொகை | பதில் வழங்கப்படவில்லை. | கணனி மென்பொருள் முறைமையை ஸ்தாபிப்பது தொடர்பாக அரசாங்க கணக்குகள் குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து |

| | | | |
|---|---|---|---|
| | ஏனைய செலவு விடயங்களுக்காக நி.பி 66 இன் மூலம் மாற்றப்பட்டிருந்தது. அதற்கிணங்க எதிர்பார்த்த பிரதிபலன்கள் இழக்கப்பட்டிருந்தது. | | எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்திறனான வருமான நிருவாகம், சேவை நாடுனருக்கு உயர்தரத்திலான சேவையை வழங்குதல், அரசாங்க நிறுவனங்களுக்கிடையே தரவுகளை பரிமாற்றம் செய்வதனை முறைமைப்படுத்தல், மனித வளங்களை முகாமைத்துவம் செய்வதற்காக முறைப்படியான வழங்கல் தொடரினை அமுல்ப்படுத்துதல் முதலிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக RASED என்ற பெயரில் புதிய மறுசீரமைப்பினைக் கொண்ட கணனி தகவல் முறைமையை செயற்படுத்தும் நடவடிக்கை 2020 செப்தம்பரிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக பரீட்சித்த போது மொடியுலர் 06 (உப செயற்பாடுகள்) இன் கீழான தேவைப்பாட்டு விபரக் குறிப்பின் வரைபு தயாரிக்கப்பட்டிருந்தும் இன்னும் மொடியுலர் 11 இன் கீழ் விபரமான தேவைப்பாட்டு விபரக் குறிப்பினைத் தயாரித்தல் தாமதமடைந்திருந்தது. மேலும் அமைச்சின் நிபுணத்துவ சேவை தொடர்ச்சியாக கிடைக்காமை மற்றும் உத்தேச ஆலோசனை சேவைக்குரிய நிதிசார் திட்டத்திற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் தாமதித்தமை முதலிய காரணங்களும் அந்த நடவடிக்கை தாமதித்தமைக்கு தாக்கமளித்திருந்தது. | நிதி அமைச்சின் தகவல் நிபுணத்துவ சேவை தொடர்ச்சியாக கிடைக்கமை விபரமான தேவைப்பாட்டு விபரக் குறிப்பு ஆவணத்தை தயாரிக்கும் நடவடிக்கையானது காணப்படுகின்ற தற்போதைய சிக்கல் நிலையில் இடம்பெற்று வருகின்றமை, நிதி சார் திட்டமும் அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளலும் பிற்போடவேண்டி ஏற்பட்டமை முதலிய காரணங்களால் செயற்பாடு தாமதமடைந்திருந்தது. | ஒண்றிணைந்த கணனி தரவு முறைமை, கணனி மென்பொருள் முறைமையை ஸ்தாபிப்பது தொடர்பாக அரசாங் கணக்குகள் குழுவினால் வழங்கிய பணிப்புரையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து எதிர்பார்த்த பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேலும் ஒன்றித்த கணனி முறைமையை அமுல்ப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை பரீட்சித்த போது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடனான தரவு பரிமாற்றம் 2021 ஒக்தோபர் மாததத்திலிருந்து அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் சுங்கத்திணைக்களத்திற்கிடையிலான தரவுப் பரிமாற்றமானது உரிய தகவல்களை வெளிப்படுத்தாமை உடன்படிக்கையானது 2021 யூலை மாதத்திலிருந்து செயற்பாட்டில் இருந்தது. அதன் பிரதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே தரவுப் பரிமாற்ற வசதிகளின் கீழ் ஒன்றித்த முறைமையின் மூலம் தகவல் பரிமாற்றம் இடம்பெறுகின்றது என்பது ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை. | உள்நாட்டு இறைவரித் திணைகளத்துடன் தரவுப் பரிமாற்றத்தினை மேற்கொள்வதற்கு இணங்கிக் கொள்ளப்பட்டது. அதற்குத் தேவையான உடன்படிக்கைகளை செய்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. சுங்கத் திணைக்களத்திற்கும் மதுவரித் திணைக்களத்திற்குமிடையேயான தரவுப் பரிமாற்றம் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றது. | -மேற்படி- |
| (ஈ) | 2155/19 ஆம் இலக்க 2019 திசெம்பர் 27 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 10/2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலில் குறிப்பிட்ட இயற்கைத் தன்மையில் மாற்றம் செய்யாத குடித்தல் மற்றும் விற்பனை செய்வதற்காக கருத்தில் கொள்ளப்பட்ட போத்தலில் அடைக்கப்பட்ட மதுபானம் ஏற்றுமதி செய்தல் மீது மதுவரியை தள்ளுபடி செய்தல் சம்பந்தமான தகவல்கள் கணக்குப் பிரிவில் ஆவணப்படுத்தப்பட்டு நாளதுவரையாக பேணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் 05 மதுவான உற்பத்தி நிறுவனங்களினால் | அமைச்சின் அறிவுறுத்தலை வழங்குமாறு வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது. அந்த அறிவுறுத்தல்களின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவாக தெரிவித்துக் கொள்கிறேன். | பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை மற்றும் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன் அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினதும் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினதும் அறிவுறுத்தலின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அவ்வாறு ஏற்றுமதி செய்த 26 சந்தரப்பங்களின் போது 11,173,738 லீற்றர் மதுபானங்களுக்காக ரூபா 3,689,638,848 தொகையான மதுவரிப்பணம் தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது.

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

.........................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ...................................... | ................................... | ..................... |
| வரி அல்லது சுங்கத்தீர்வை செலுத்தபடாத மது பானங்களை பயன்படுத்துவதனைக் குறைத்தல், மதுவருமானத்தை மேலும் பாதுகாத்தல், போலி மதுபானங்களை தவிர்த்தல் என்பவற்றை அடிப்படைக் குறிக்கோளாக கொண்டு ஸ்டிகர் முகாமைத்துவ முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு 2017 ஒக்தோபர் 17 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் முறைமையை ஸ்தாபித்தல், உரிமை மற்றும் செயற்படுத்தும் அடிப்படையில் ஸ்டிகர் மற்றும் சேவை வழங்கலுக்கான ஒப்பந்தம் இந்திய கம்பனிக்கு வழங்கப்பட்டு 2018 | 2022 சனவரி 03 ஆந் திகதி உள்நாட்டு மதுபானங்கள் மீது பாதுகாப்பு குறியீடுகளை ஈடுபடுத்துதல் ஆரம்பிக்கப்பட்டது 06 உள்நாட்டு மதுபான உற்பத்தி நிறுவனங்கள் டிஜிடல் குறியீடுகளையும் 59 உற்பத்தி நிறுவனங்கள் ஸ்டிகர் ஒட்டும் நடைமுறைகளையும் பயன்படுத்துகின்றன. விசேட காரணத்தின் அடிப்படையில் ஒரு உற்பத்தி நிறுவனம் மாத்திரம் டிஜிடல் ஸ்டிகர் ஆகிய இரண்டு | செயற்திட்டத்தில் எதிர்பாத்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செப்தம்பர் 21 ஆந் திகதி கம்பனியுடன் இரு தரப்பு உடன்படிக்கை செய்துகொண்டிருந்தது. அதன் கீழ் செயற்திட்டத்தை 05 ஆண்டுகள் வரை அமுல்ப்படுத்துவதற்கும் மாதாந்தம் ஆகக் குறைந்தது 32 மில்லியன் ஸ்டிகர்கர்களை ஆலோசனை கம்பனிகளிடமிருந்து கொள்வனவு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் சட்ட வலுவினைப் பெற்றுக்கொள்வதற்காக மதுவரி கட்டளைச் சட்டம் 2019 செப்தெம்பர் 03 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது. இறக்குமதி செய்த மதுபானங்களுக்காக பாதுகாப்பு ஸ்டிகரினை ஈடுபடுத்துதல் 2019 யூலை 20 ஆந் திகதியிலிருந்து ஈடுபடுத்த அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.

உள்நாட்டில் உற்பத்தி செய்த மதுபானத்திற்காக பாதுகாப்பு ஸ்டிகரினை ஒட்டுதல் 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கீழே குறிப்பிட்ட விடங்களின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரை தாமதமடைந்திருந்தது.

(அ) உற்பத்தி வேகம் மற்றும் அதிக இயலளவுள்ள சுயமாக போத்தலில் அடைக்கும் இயந்திரங்களை பயன்படுத்துகின்ற சில மதுபான உற்பத்திக் கம்பனிகளுக்கு சுயமாக மதுபானங்களை போத்தலில் அடைக்கும் இயந்திரங்களுக்கு ஒத்த வகையிலான ஸ்டிகர் ஒட்டும் இயந்திரங்களை தேடிக்கண்டு பிடிக்க முடியாது எனக் காட்டும் நடைமுறைச் சிக்கல்,

(ஆ) ஸ்டிகர் முறைமைகளுடன் டிஜிடல் தொழிநுட்ப முறைமையினை அறிமுகப்படுத்துவது தொடர்பாக காணப்படுகின்ற சட்ட ரீதியான மற்றும் நடைமுறைகளையும் பயன்படுத்தியுள்ளது.

தொழில்நுட்ப ரீதியான சிக்கல்களை இனங்கண்டு டிஜிடல் தொழில் நுட்ப முறைமையை அமுல்ப்படுத்தும் சாத்திய வளத்தினை ஆராய்ந்து பார்ப்பதற்காக தொழில்நுட்பக் குழுவினை நியமிக்க வேண்டி ஏற்பட்டமை,

(இ) சில உற்பத்திசாலைகளில் டிஜிடல் தொழில் நுட்ப முறைமையை சரிபார்க்கும் ஒத்திகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை,

(ஈ) அனுமதிப்பத்திரம் பெற்ற உற்பத்தியாளர்களின் வேண்டுதலின் பிரகாரம் டிஜிடல் பிரின்ட் முறைமை அல்லது ஸ்டிகர் ஒட்டுதல் ஆகிய இரண்டு முறைமைகளில் ஒரு முறைமையை பயன்படுத்துவதற்குரிய சட்டங்களை திருத்தம் செய்தல்

(உ) ஆலோசனை கம்பனியின் பொறியியலாளர்களுடன் மதுபான உற்பத்தி சாலைகளை அவதானித்தல் மற்றும் உற்பத்திச் சாலைகளில் அமைந்திருக்கவேண்டிய உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான அறிக்கைகளை தயாரித்தல் சம்பந்தமாக மதுபான உற்பத்தியாளர்களுக்கு தெரியப்படுத்துவதில் தாமதம்

(ஊ) ஆலோசனைக் கம்பனியானது செயற்திட்டத்திற்குரிய டிஜிடல் குறிகளை ஒட்டும் இயந்திரத்தை மீளாய்வாண்டின் இறுதிவரை வழங்காதிருந்தமை

(எ) உடன்படிக்கை செய்துகொண்ட வெளிநாட்டு ஆலோசனைக் கம்பனியால் மென்பொருள்களை அபிவிருத்தி

செய்தல் செயற்திட்டத்திற்குரிய துணைக் கருவிகளை உள்ளடக்கிய ஏனைய செயற்பாடுகள் தொடர்பாக திட்டமிட்ட செயற்பாடுகளை மீளாய்வாண்டு வரை அடிக்கடி தாமதித்திருந்தமை

அதற்கிணங்க செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் மேலும் தாமதமடந்திருந்தது.

## 3.3 பெறுகைகள்

....................

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
| --- | --- | --- |
| ...................................... | .................................. | ..................... |
| பெறுகைத் திட்டத்தின் 11 வீச்சுக்களின் கீழ் ஒரு தொகுதியிலிருந்து 20 உபகரணங்கள் வீதம் மதுபானங்களின் காரத்தை பார்க்கும் 220 உபகரணங்களை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகை நடவடிக்கைகளில் காணப்பட்ட தாமதத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் இறுதி வரை கொள்வனவு செய்தல் இடம்பெறவில்லை. | திணைக்களத்தின் தேவைப்பாட்டிற்காக 11 வீச்சுக்களின் கீழ் ஒரு தொகுதியிலிருந்து 20 உபகரணங்கள் வீதம் 220 ஹயிட்ரோ மீட்டர்களை கொள்வனவு செய்வதற்காக 2020 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தின் போது அங்கீகாரத்தினைப் பெற்று விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் அதற்காக கிடைத்துள்ள விலை மனுக்களை சமர்ப்பித்த நிறுவனங்களிடமிருந்து அதுதொடர்பான மாதிரிகள் (Sample) வேண்டப்பட்டுள்ளன. எனினும் அந்த மாதிரிகளை வழங்குவதற்கு அந்த நிறுவனங்களிடம் இந்த உபகரணங்கள் இல்லாததனைப் போல 2020 ஆம் ஆண்டின் உலகம் முழுவதும் வேகமாக பரவிய கொவிட்-19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக இறக்குமதி செய்தேனும் | பெறுகை நடவடிக்கையானது முறையான திட்டத்திற்கு இணங்க மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

வழங்குவதற்கு முடியாது எனவும் அந்த நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டது. அக்காரணத்தினால் 2020 ஆம் ஆண்டின் போது அப்பொருட்களை கொள்வனவு செய்வதற்கு முடியாதிருந்தது.

ஹயிட்ரோமீட்டருக்கு சந்தையில் தட்டுப்பாடு காணப்படுவதனால் 2021 ஆம் ஆண்டின் போது அந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் போது நிகழ்காலத்தில் இத்திணைக்களத்திற்கு மிகவும் பொருத்தமான வகையில் கொள்வனவு செய்தல் பொருத்தமானது எனவும் அவற்றின் பொருள் விபரக்குறிப்பினை மீண்டும் தயாரித்தல் பொருத்தமானது எனவும் முன்மொழியப்பட்டது. அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வு திணைக்கள உத்தியோகத்தர்களை உள்ளடக்கி நியமிக்கப்பட்ட ஒரு குழுவினால் உரிய பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. அதற்காக 2021 ஆம் ஆண்டின் நிதி ஏற்பாடு போதியதாக இல்லாததனால் அதனை மதுவரி வெகுமதி நிதியத்தின் பணத்தைப் பயன்படுத்தி இந்த ஆண்டின் போது கொள்வனவு செய்வதற்கு நிதி அமைச்சின் அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவாக தெரிவிக்கிறேன்.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**..................................................**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
| --- | --- | --- |

| ...................................... | ................................... | ..................... |
|---|---|---|
| மதுவரி அலுவலகங்கள் செயற்படுகின்ற 17 காணிகள் தொடர்பான காணி உறுதிகளைப் பெற்றுக்கொள்ளுதல் அல்லது அரசாங்கத்தின் காணிகளை பொறுப்பேற்கும் நடவடிக்கை மீளாய்வாண்டின் போது முடிவடைந்திருக்கவில்லை. | தீணைக்களத்தின் 42 காணிகளில் தற்பொழுது 27 காணிகள் பெறுப்பேற்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 15 காணிகளை பொறுப்பேற்பதற்குரிய நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது | தெளிவான உறுதியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

.................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ................................... | ..................... |
| முல்லைத் தீவு மற்றும் பருத்தித்துறை அலுவலகங்களை நிர்மாணித்தலின் தாமதத்தினாலும் மற்றும் ஹற்றன், யாழ்ப்பாண நிர்மாண இடங்கள் முறையே பாதுகாப்பின்மை மற்றும் பொருத்தமின்மையின் காரணமாகவும் கைவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்த முடியாமையின் அடிப்படையில் தொடர்ந்தும் அந்த அலுவலகங்களை வாடகை அடிப்படையில் செயற்படுத்துவதற்காக ரூபா 2,802,000 தொகையை ஆண்டின் போது செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | யாழ்ப்பாண மதுவரி அலுவலகத்தை நிர்மாணிப்பதற்கு உத்தேசித்திருந்த காணி பாதுகாப்பின்மையின் அடிப்படையில் புதிய கட்டிடத்தினை நிர்மாணித்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டது.<br><br>ஹட்டன் காணியானது அதிக கருங்கற்களைக் கொண்ட பிரதேசமாக இருந்ததன் காரணமாக நிலத்தை தயார் படுத்துவதற்கு அதிக செலவு ஏற்படும் என்ற காரணத்தினால் நிர்மாண நடவடிக்கையை மேற்கொள்ளுதல் பொருத்தமற்றது எனவும் இதற்காக வேறு காணியை தேடிப்பார்த்தல் பெருத்தமானது எனவும் சிபார்சு செய்யப்பட்டது. முல்லைத்தீவு கட்டிடம் 2022 ஏப்ரல் 09 ஆந் திகதி | திட்டமிட்டவாறு நிர்மாணங்களை தாமதமின்றி பூர்த்தி செய்து கொள்வதற்கும் ஆண்டின் நிதி ஏற்பாட்டினை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

திறக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை அலுவலக கட்டிடத் தொகுதியினை நிர்மாணிக்கும் நடவடிக்கை தொடர்ச்சியாக தாமதமடைந்துள்ளது.

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

....................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ................................... | ..................... |
| (அ) அனுமதி பெற்ற 23 மதுபான உற்பத்திச் சாலைகளுக்கு மத்தியில் அரசாங்க வருமானத்திற்கு மிகவும் குறைந்த பங்களிப்பினை வழங்குகின்ற 6 உற்பத்திச்சாலைக் கம்பனிகள் தொடர்பாக மதுவரித் திணைக்களத்தின் ஒழுங்குபடுத்தலின் ஆக்கபூர்வத் தன்மையை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொண்ட செயலாற்றல் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையின் 19 விடயங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவதற்காக திணைக்களத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் போதிய மட்டத்தில் இருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | சிபாரிசுகளை அமுல்ப்படுத்துவது சம்பந்தமாக கவனம் செலுத்தப்படவேண்டியதுடன் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடுதல் வேண்டும். |

**(ஆ) மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை பிடித்தல்**

**.............................................................**

மதுவரித் திணைகளம் நிறைவேற்றுவதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள குறிக்கோள்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக 2021 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளில் மதுவரி திணைக்களத்தினால் பிடிக்கப்பட்ட (சுற்றிவளைப்புக்கள்) குற்றங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| **அதிகாரச் சட்டத்திற்கான தொடர்பு** | **மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை பிடித்தல்களின் எண்ணிக்கை** | | | | |
|---|---|---|---|---|---|
| | **2021** | **2020** | **2019.** | **2018** | **2017** |
| மதுவரி கட்டளைச் சட்டம் | 31,952 | 31,916 | 34,111 | 36,884 | 35,488 |
| விச வகைகள் அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டம் | 4,278 | 4,988 | 8,243 | 6,047 | 6,103 |
| புகையிலை வரி அதிகாரச் சட்டம் | 2,576 | 2,253 | 3,602 | 3,479 | 2,485 |
| புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை அதிகாச் சட்டம் | 302 | 466 | 1,435 | 2,902 | 4,406 |
| மொத்த பிடித்தல்களின் எண்ணிக்கை | 39,108 | 39,623 | 47,391 | 49,312 | 48,482 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (i) | மேலுள்ள தகவல்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2018 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த பிடித்தல்கள் 830 ஆல் அல்லது 2 இற்கு அண்மித்த சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 | 2017 இலிருந்து 2019 ஆம் ஆண்டுவரை அண்ணளவாக சமமான எண்ணிக்கையான குற்றங்களை பிடித்தல்கள் இடம்பெற்றிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டினை விட 2018 ஆம் | உரிய அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஒட்டுமொத்த பிடித்தல்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | ஆண்டின் போது அதிகளவான எண்ணிக்கையான பிடித்தல்கள் இடம்பெற்றுள்ளது. மேலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் பிடித்தல்களின் எண்ணிக்கை குறைவடைந்தமையானது அக்காலப்பகுதியின் போது நாடு முழுவதும் காணப்பட்ட மதுவரி உத்தியோகத்தர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அதிக தொற்றுநோய் மற்றும் ஏனைய நிலைமைகளின் காரணமாக என்பதனால் அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. | காட்டப்பட்டுள்ள தூரநோக்கு, , செயற்பணி, குறிக்கோள்கள், கடமைகள் என்பன நிறைவேற்றப்படுதல் வேண்டும். |
| (ii) | 2021 ஆம் ஆண்டிற்கான ஒட்டுமொத்த பிடித்தல்களில் 81.7 சதவீதமானது மதுவரி கட்டளைச் சட்டத்தின் கீழே பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் 18.3 சதவீதமானது விச வகைகள், அபின், ஆபத்தான மருந்துகள் கட்டளைச் சட்டம், புகையிலை வரி அதிகாரச் சட்டம், புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை அதிகாரச் சட்டம் என்பவற்றின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றங்களை பிடித்தல்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அது முறையே 11 சதவீதம், 6.6 சதவீதம் மற்றும் 0.7 சதவீத பெறுமதியை கொண்டிருந்தன. | அவதானிப்புக்களில் காட்டப்பட்டுள்ள புள்ளிவிபரங்களுடன் இணங்குகிறேன். உரிய குற்றங்களை அவற்றுக்குப் பின்னணியான சட்ட ஏற்பாடுகளின் கீழ் வகைப்படுத்துதல் புள்ளிவிபர ரீதியாக பிரயோசனமாக இருக்கும் என்ற போதிலும் குற்றங்களை பிடித்தல் நடைமுறையின் போது உத்தியோகத்தர்கள் அமுல்ப்படுத்துவது கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் என்பதனாலும் அத்தகவல்களின் தன்மையானது உத்தியோகத்தர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்பதனாலும் அவற்றினை அடிப்படையாகக் | செயலாற்றல் குறைவடைந்துள்ள துறைகளுக்காக ஒழுங்குபடுத்துதல் நடைமுறைகள் ஸ்தாபிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள குற்ற அறிக்கைகளில் பிடித்தல்களின் வகைப்படுத்தல் எதிர்வு கூறுவதற்காகும். | |
| (இ) | மேற்கொள்ளப்பட்டுள்ள கைத்தொழில் குற்றங்களை பிடித்தல் | தீர்த்து வைக்கப்படாத கைத்தொழில் குற்ற அறிக்கைகள். | |
| | மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டுகள் தொடர்பான கைத்தொழில் குற்றங்களை பிடித்தல் சம்பந்தமாக மதுவரி திணைக்களத்தின் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பிரிவினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிடித்தல்கள் சம்பந்தமான தகவல்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான சுற்றி வளைப்பு இலக்குகளை வழங்குதல் வருடாந்தம் படிப்படியாக குறைவடைந்திருந்தது. மேலும் இலக்கிடப்பட்ட பிடித்தல்களுடன் ஒப்பிடுகையில் மேற்கொள்ளப்பட்ட பிடித்தல்களின் அளவு அதிகரித்திருந்தும் 2017 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரை மேற்கொண்ட பிடித்தல்களின் அளவு படிப்படியாக குறைவடைந்திருந்தது. 2021 ஆம் அண்டில் உள்ளபடியான பிடித்தல்களின் எண்ணிக்கை 4098 ஆக இருந்த போதிலும் தொடக்கத்தில் திட்டமிட்ட இலக்கிடப்பட்ட பிடித்தல்களின் எண்ணிக்கை 3428 இலிருந்து 2571 வரை 857 ஆல் அல்லது 25 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | கைத்தொழில் குற்ற அறிக்கை தீர்த்துவைக்கப்பட்ட கைத்தொழில் குற்ற அறிக்கையாக மாறுவதாவது அதன்மீது இணக்கப்பாட்டு கட்டணத்தை விதித்து அது செலுத்தி முடிவடைந்ததன் பின்பாகும். பெரும்பாலும் கைத்தொழில் குற்றங்கள் மீது விதிக்கப்படுகின்ற இணக்கப்பாட்டு கட்டணத்தை செலுத்துவதற்காக அனுமதிப்பத்திரதாரர்கள் ஆண்டின் நடுப்பகுதி வரை காலம் எடுப்பதுடன் அப்போது சட்ட ஏற்பாடுகளின் கீழ் 10% தாமதக் கட்டணத்துடன் அந்த இணக்கப்பாட்டுக் கட்டணத்தை செலுத்தி ஆண்டின் இறுதியின் போது தனது அனுமதிப்பத்திரத்தினை அடுத்துவரும் ஆண்டிற்காக புதுப்பித்தல் மேற்கொள்ளப்படும். | 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 03/2011 ஆம் இலக்க மதுவரி சுற்றறிக்கையின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட 09 இன் கீழான பிரதான தொகுதியின் நிபந்தனைகளை மீறுவதனால் ஏற்படக்கூடிய பாதகமான நிலைமையை குறைப்பதற்காக அனுமதி பெற்ற இடம் தொடர்பாக தொடர்ச்சியான பரீட்சிப்பிற்கு உட்படுத்துதல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஈ) | உள்நாட்டுச் சந்தையில் இறக்குமதி செய்யப்படுகின்ற | கருத்துரைகள் | இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுபானங்கள் தொடர்பாக மதுவரி ர.பி 03 அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்களிலிருந்து 2021 பெப்ரவரி 19 ஆந் திகதிய 04/2021 ஆம் இலக்க மதுவரி சுற்றறிக்கையின் பிரகாரம் அரையாண்டு ரீதியாக மதுபான வகைகளிலிருந்து மாதிரிகளைப் பெற்று இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பி அறிக்கையினைப் பெற்று நியமம் மற்றும் தரத்தினை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அவ்வாறான அறிக்கைக்காக மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததானது 6 இடங்களில் 53 சந்தர்ப்பங்களில் மாத்திரமாகும். | தரப்படவில்லை. | மதுபானங்கள் தொடர்பாக நியமங்கள் மற்றும் பொருள் விபரக் குறிப்பிற்கான இணக்கப்பாடு சம்பந்தமாக திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மாறவில மதுவரி அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள வடிசாலைகளிலிருந்து மீளாய்வாண்டில் தொடக்க அரையாண்டு தொடர்பாக இரண்டு தடவைகள் சுத்திகரிக்கும் போது வழங்கப்படுகின்ற எல்லையை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்றுமதிக்காக அறவிட வேண்டிய ரூபா 387,990 பணமும் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் உற்பத்திச் சாலைகள் மற்றும் வடிசாலைகளிலிருந்து மதுபானம் மற்றும் ஸ்பிரீட் உற்பத்தி நடைமுறைகளின் போது இடம்பெறுகின்ற கழிவுப் பொருட்களுக்காக மதுவரிப் பணம் அறவீடு செய்தல் சம்பந்தமான நடைமுறை அமுல்ப்படுத்தப்படுகின்றது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | இன்றுவரையான காலப்பகுதியின் போது உற்பத்திக் கழிவுகளுக்காக அறவிடவேண்டிய வரிப்பணத்தை அறவீடு செய்தல் தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதனைப் பரீட்சித்து எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மதுபானம் மற்றும் ஸ்பிரீட் உற்பத்தியின் போது கழிவுப் பொருட்களுக்காக வழங்கப்படுகின்ற எல்லையை மிகைத்து இடம்பெறுகின்ற மதுவரிப் பணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமான நடைமுறையினை அமுல்ப்படுத்துதல் தொடர்பாக கவனம் செலுத்தப்படுத்தல் வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டிற்கான வருமான இலக்கைத் தயாரிக்கும் போது செயற்படும் மட்டத்தில் இல்லாத 04 உற்பத்திச் | மீண்டும் மீளாய்வு செய்ததன் பின்னர் அந்த இலக்குகள் நீக்கப்பட்டு வேறு | சட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் வருமானங்களைச் சேகரிப்பதற்கு உரிய நிறுவனங்களிடமிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | சாலைகளிலிருந்து ரூபா 7,001,935,186 மொத்த தொகையான வரி வருமானம் எதிர்பார்க்கப்பட்டிருந்தும் அந்த வருமானம் கிடைத்திருக்கவில்லை. | உற்பத்திச் சாலைகளுடன் செம்மைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மாத்திரம் வரி அறவீடு செய்வது சம்பந்தமாக மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |
| (எ) | மதுவரித் திணைக்களத்தின் கீழ் அனுமதிபெற்ற 26 உற்பத்திச் சாலைகள் செயற்படுவதுடன் அந்த உற்பத்திச்சாலைகளால் 2021 ஆம் ஆண்டிற்காக வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற மதுபான உற்பத்திகளும் அதன் மூலம் வருமானத்திற்கான பங்களிப்புக்களும் மற்றும் ஒவ்வொரு உற்பத்திக் கம்பனியினதும் சந்தை பாகமும் தொடர்பான தரவுகளைப் பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டதானது மீளாய்வாண்டில் 23 மதுபான உற்பத்திச் சாலைகளுக்கு மத்தியில் காரமான மதுபானங்கள் உற்பத்தி செய்கின்ற 21 கம்பனிகளும் தானிய மதுபானங்கள் உற்பத்தி செய்கின்ற 2 கம்பனிகளும் மொத்த வருமானத்திற்கு முறையே 70.81 சதவீதத்திற்கும் 29.19 சதவீதத்திற்குமான பங்களிப்பினை வழங்கியிருந்தன. செயற்படும் நிலையில் காணப்பட்ட 21 காரமான மதுபான உற்பத்திக் கம்பனிகளுக்கு மத்தியில் மொத்த வருமானத்தில் 64.6 சதவீதமான பங்களிப்பினை 4 கம்பனிகள் மாத்திரம் வழங்கியிருந்ததுடன் 3 உற்பத்திக் கம்பனிகளின் பங்களிப்பு 3.9 சதவீதமான குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. ஏனைய 12 கம்பனிகளின் பங்களிப்பு 1.8 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. | ஒவ்வொரு உற்பத்திக் கம்பனியும் சந்தைப் பாகத்தைக் கொண்டிருப்பதானது மதுவரித் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்களினாலாகும். அரசாங்க வருமானத்தை பாதுகாப்பதற்காக எடுக்கவேண்டிய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. | வருமானம் சார்ந்த தரவு ரீதியான தகவல்களை பகுப்பாய்வு ரீதியாக மீளாய்வு செய்வதன் மூலம் அரசாங்க வருமானத்தை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | மதுவரித் திணைக்களத்தின் மூலம் பீடி/சிகரட்/சுருட்டு | -மேற்படி- | அதற்கிணங்க செயற்படாத நிலையில் |

| | | |
|---|---|---|
| சம்பந்தமாக பதிவுசெய்த 774 சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தும் 2022-03-31 ஆந் திகதியளவில் நடைமுறை ஆண்டிற்காக பதிவுசெய்தலினை புதுப்பித்த நிறுவனங்களின் எண்ணிக்கை 509 ஆகும். அதற்கிணங்க செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை 265 எனவும் இந்த நிறுவனங்களிடமிருந்து பதிவு செய்தல் கட்டணம், விண்ணப்பக் கட்டணம், முத்திரை வரி ஆகிய வருமானங்கள் மதுவரித் திணைக்களத்தினால் இழக்கப்பட்டிருந்தன என்பது அவதானிக்கப்பட்டது. | | காணப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

**.................................................................................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................... | ................................... | ..................... |
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2030 இன் பிரகாரம் மதுவரித் திணைக்களம் 15 குறிக்கோள்கள் தொடர்பாக அடைந்து கொள்ளவேண்டிய 37 இலக்குகளில் மீளாய்வாண்டிற்காக | இலங்கை மதுவரித் திணைக்களம் ஐக்கிய நாடுகள் அமப்பின் நிலையேபறான அபிவிருத்தி நிகழச்சித் திட்டம் 2030 இல் திணைக்களத்தின் 17 பிரதான குறிக்கோள்களின் | சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பிற்காக இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வது |

| | | |
|---|---|---|
| 05 குறிக்கோள்களின் கீழ் 07 இலக்குகள் இனங்காணப்பட்டிருந்தன. அதில் உள்ளடக்கப்பட்ட சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பிற்காக இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வது சம்பந்தமாக பொதுக் கணக்குகள் குழுக்கூட்டத்தின் போது மதுபானத்திற்காக முறையான நியமங்களை அறிமுகப்படுத்துதல், ஆய்வு கூடத்தை ஸ்தாபித்தல், வருடாந்தம் மதுபான கைத்தொழிலிருந்து கழிவுப் பொருள் உருவாகுவதைத் தவிர்ப்பதற்காக உத்தேச சுற்றாடலுக்குச் சாதகமான உற்பத்தி நடைமுறைகளை ஸ்தாபித்தல் மற்றும் உருவாகின்ற கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு விடுவித்தல் மற்றும் அவற்றினை மீள் சுழற்சி செய்து மீண்டும் பயன்படுத்துவதன் மூலம் குறைத்தல் முதலிய துறைகள் தொடர்பான குறிக்கோள்களை நிறைவேற்றுவது சம்பந்தமான செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள செயற்பாடுகளுக்காக உறுதியாக அடைந்து கொள்ளப்பட்ட செயல்முன்னேற்றத்தைக் காட்டும் தகவல்கள் கணக்காய்விற்கு வழங்கப்படவில்லை. | பிரகாரம் அதில் 15 குறிக்கோள்களுக்கு 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமானது இலக்குகளை மேற்கொண்டிருந்தும் திணைக்களம் என்ற வகையில் அவ்வாறான பாரிய குறிக்கோள்களின் அளவிற்கு நடவடிக்கை எடுத்தல் சிக்கலானது என்பதனால் 2021 செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது அதில் 5 குறிக்கோள்கள் வரை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிணங்க கீழே குறிப்பிட்ட நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு முன்னுரிமை வழங்குதலும் அக்குறிக்கோள்கள் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்காக இலக்கிடப்பட்டு 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமும் தயாரிக்கப்பட்டது. தற்பொழுது இலங்கை மதுவரித் திணைக்களத்தின் அனைத்து செயற்பாடுகளையும் இந்த 5 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளினூடாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சம்பந்தமாக பொதுக் கணக்குகள் குழுக்கூட்டத்தின் போது கவனம் செலுத்தப்பட்ட பணிப்புரைகள் அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

## 5. நல்லாட்சி

**...............**

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

**...............................................**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் | சிபாரிசுகள் |
|---|---|---|

**கருத்துரைகள்**

| ....................................... | .................................... | ..................... |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் 19 துறைகள் தொடர்பாக 10 கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தும் அதில் 10 துறைகள் தொடர்பான 05 உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் 05 ஐயவினாக்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட கட்டுப்பாட்டு நடைமுறைகளிலுள்ள குறைபாடுகளுக்காக முகாமைத்துவம் எடுத்த நடவடிக்கைகளை கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை | ஆபத்தை அடிப்படையாகக் கொண்டு சிறப்பாகத் திட்டமிடப்பட்ட கணக்காய்வுத் திட்டத்தின் மூலம் உள்ளகக் கணக்காய்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

## 6. மனித வளங்கள் முகாமைத்துவம்

.............................................................

மதுவரித் திணைக்களத்தின் கடமையானது தலைமை அலுவலகம் உள்ளடங்கலாக நாடு முழுவதும் அமைந்துள்ள 13 மதுவரி அலுவலகங்கள், 30 மதுவரி அத்தியட்சகர் அலுவலகங்கள் 56 மதுவரி நிலையங்கள் 5 விசேட செயற்பாட்டு பிரிவுகள், போதைப் பொருள் சட்டத்தை அமுல்ப்படுத்தும் அலகு என்பவைகளை உள்ளடக்கி நாடளாவிய சேவைகளை நிறைவேற்றுகின்றது. பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| **ஊழியர் வகை** | **அங்கீகரித்த பதவியணியினர்** | **உள்ளபடியான பதவியணியினர்** | **வெற்றிடங்களின் எண்ணிக்கை** |
| --- | --- | --- | --- |
| ................ | ......................... | ............................ | ........................... |
| சிரேஷ்ட மட்டம் | 68 | 32 | 36 |
| மூன்றாம் மட்டம் | 381 | 295 | 86 |
| இரண்டாம் மட்டம் | 1,048 | 875 | 173 |
| ஆரம்ப மட்டம் | 142 | 86 | 57 |
| | .................. | ................ | .............. |
| மொத்தம் | 1,639 | 1,288 | 352 |

............ ..................... ..............

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ...................................... | | ................................... | ..................... |
| (அ) | சிரேஷ்ட மட்டத்திற்குரிய மேலதிக மதுவரி ஆணையாளர் நாயக பதவி, பிரதான நிதி உத்தியோகத்தர் பதவி, மதுவரி ஆணையாளர் பதவிகள், 6 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகள், 4 உதவி மதுவரி ஆணையாளர் பதவிகள், 20 மதுவரி அத்தியட்சகர் பதவிகள் என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன. | மேலதிக மதுவரி ஆணையாளர் பதவியிலும் பிரதான நிதி உத்தியோகத்தர் பதவியிலும் தற்பொழுது பதில் கடமை பார்ப்பதற்காக இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த 02 வெற்றிடங்களும் காணப்படுகின்றன. மதுவரி ஆணையாளர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்காக தகமை பெற்ற உத்தியோகத்தர்கள் இருக்கவில்லை. 6 பிரதி மதுவரி ஆணையாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் தகமைபெற்ற இரண்டு உத்தியோகத்தர்கள் இருக்கின்ற போதிலும் அவர்கள் அதற்காக விண்ணப்பித்திருக்கவில்லை. 4 உதவி மதுவரி ஆணையாளர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்பட்டன. ஒரு பதவியானது மதுவரி அத்தியட்சகருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மதுவரி அத்தியட்சகர் பதவிகளின் வெற்றிடங்கள் 21 ஆகும். அதில் 11 நபர்களுக்காக நேர்முகப் பரீட்சைகளை நடாத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் இன்னும் 8 நபர்கள் பரீட்சைக்காக விண்ணப்பித்துள்ளனர். | நிறுவனத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தின் செயற்பணிக்கு நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற சிரேஷ்ட மட்டத்திலுள்ள 36 பதவிகளும் மூன்றாம் மட்டத்திலுள்ள 86 | சிரேஷ்ட மட்டத்திலுள்ள பதவிகளின் 36 வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்ட தகமைகளைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்கள் | -மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. | இல்லாததனால் இப்பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குமாறு எனது ED/02/03/02/10 ஆம் இலக்க 2022-03-10 ஆந் திகதிய கடிதத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குத் தெரியப்படுத்தப்பட்டது. அதற்கிணங்க நிர்ணயிக்கப்பட்ட ஆட்சேர்பபு நடைமுறையில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சேவைக் காலத்தை தவிர்த்து ஏனைய தகமைகளை பூர்த்திசெய்துள்ள உத்தியோகத்தர்களை சேவைக் காலத்தை கருத்தில் கொள்ளாது ஒரு சந்தர்ப்பத்தில் மாத்திரம் பதவியுயர்வுக்காக சிபார்சு செய்து அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததுடன் அதன் செயல் முன்னேற்றதிற்கு இணங்க இந்த சிரேஷ்ட மட்டத்தின் வெற்றிடங்களை நிரப்பக் கூடியதாக உள்ளது.<br><br>அவ்வாறே மூன்றாம் மட்டத்தின் உத்தியோகத்தர்களாக 18 பிரதான மதுவரி பரிசோதகர்களைப் பதவியுயர்த்துதல் மற்றும் திறந்த அடிப்படையில் 37 மதுவரி பரிசோதகர்களை சேர்த்துக்கொள்ளல் இடம்பெற்றுள்ளது | |
| (இ) | சட்ட உத்தியோகத்தர், உதவி பணிப்பாளர் தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிருவாக உத்தியோகத்தர் பதவிகள் இதுவரை நிரப்பப்படவில்லை. | சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப் பரீட்சை நடாத்தி அந்த ஆவணங்கள் அரசாங் சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.<br><br>வெற்றிடமாகக் காணப்பட்ட உதவி பணிப்பாளர் (தகவல் தொழில்நுட்பம்) பதவி மற்றும் நிருவாக உத்தியோகத்தர் பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை வழங்குமாறு நிதி அமைச்சு | -மேற்படி- |

செயலாளரின் மூலம் ஒன்றிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வேண்டுதல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.